ஒப்புதல் பெற்றபின் சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்படும், அதன பின்னர் அங்கிருக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான பொருளாதார வருமானத்தையும் கணக்கில் கொள்ளாமல் எல்லாச் சலுகையும் வழங்குவதற்கு இந்தச் சட்டம் உறுதுணையாக இருக்கும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் ஒட்டுமொத்தமாக பட்டா வழங்குவதில், மிக, மிகத் தாமதப்படுகின்றது. அரசாங்கம், அந்த மானியம் வருகின்ற போதாவது, அனைத்து மக்களுக்கும், எங்கு தாமதப்பட்டிருக்கின்றதோ, அங்கு பட்டாக்கள் உடனடியாக வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. அப்படி இருக்குமானால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

கொடைகானலிலிருந்து நகரப் பேருந்து.

274—(*வினா எண். 8524) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தனி வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து கொடைக்கானலிலிருந்து நகரப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை? எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம். கொடைக்கானலில் நகரப்பேருந்து விடுவதற்காக 27-8-1986 தேதிய தமிழ்நாடு அரசிதழில், அதனை நகரமாக அறிவிக்கை செய்யப்பட்டு, முதல் கட்டமாக கீழ்க்கண்ட வழித்தடங்களில் இரண்டு நகரப்பேருந்துகள் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

(1) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பண்ணைக்காடு

(2) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பூம்பாறை.

(3) கொடைக்கானல் பேருந்து நிலையம் — வில்பட்டி, குறிஞ்சி ஆண்டவர் கோயில் (தொடுதல்)

4) கொடைக்கானல் பேருந்து நிலையம்—பள்ளங்கி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS